सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

**असाधारण**

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

**प्रधिकार प्राकाशित**

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

नई दिल्ली, सोमवार, 23 नवंबर, 1992/1914 शक

New Delhi, Monday, 23rd November 1992

*புது தில்லி, 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் தேதி, திங்கட்கிழமை*

## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 23rd November 1992

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 23, நவம்பர் 1992*

The translation in Tamil of the Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 (33 of 1989), The All-India Services Act, 1951 (61 of 1951), The Dowri Prohibition Act, 1961 (28 of 1961), The explosive Substances Act, 1908 (6 of 1908), The President (Discharge of Functions) Act, 1969 (16 of 1969), The Government Savings Certificates Act, 1959 (46 of 1959), The Weekly Holidays Act, 1942 (18 of 1942) and The Hindu Adoptions and Maintenance Act, 1956 (78 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (33/1989), அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951 - (61/1951), மணக்கொடைத் தடுப்புச் சட்டம், 1961 (28/1961), வெடிபொருள்கள் சட்டம், 1908 (6/1908), குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969 (16/1969), அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் சட்டம், 1959 (46/1959), வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942 (18/1942) மற்றும் இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956 (78/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)–வின் கீழ் இவையே தமிழில் அதிகாரமுறை மொழிபெயர்ப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.*

# குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969

(சட்ட எண் 16/1969)

[1969, மே 28]

குறித்த சில எதிருறு நிகழ்வுகளில் குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றுவதற்கு வகை செய்வதற்கான சட்டம்.

இந்தியக் குடியரசின் இருபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

**குறுந்தலைப்பு.**

1. இந்தச் சட்டம், குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969 என்று வழங்கப்பெறும்.

**பொருள்வரையறைகள்.**

2. இந்தச் சட்டத்தில், ''குடியரசுத்தலைவர்'', ''குடியரசுத்துணைத் தலைவர்'', ''இரண்டாம் இணைப்புப் பட்டியல்'' என்பவை, முறையே இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் மற்றும் அரசமைப்பின் இரண்டாம் இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்.

**குறித்த சில எதிருறு நிகழ்வுகளில் குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றுதல்.**

3. (1) இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியகற்றுகை காரணமாக அல்லது பிறவாறாக, குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளிலும் காலியிடங்கள் ஏற்படும் நிகழ்வில், குடியரசுத் தலைவரின் பதவியில் ஏற்படும் காலியிடத்தை நிரப்புவதற்கு, அரசமைப்பின் வகையங்களுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு புதிய குடியரசுத் தலைவர் தம் பதவியை ஏற்கும் வரையில் அல்லது அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு புதிய குடியரசுத் துணைத்தலைவர் அரசமைப்பின் உறுப்பு 65இன்படி குடியரசுத் தலைவராகச் செயலுறத் தொடங்கும் வரையில், இவற்றில், எது முந்தியதோ அதுவரையில், இந்தியத் தலைமை நீதிபதி அல்லது அவர் இல்லாதபோது ஆங்கிருக்கும் இந்திய உச்சநீதிமன்ற நீதிபதிகளில் மிக்க முதுநிலையராக உள்ள நீதிபதி ஒருவர் குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றி வருவார்.

(2) குடியரசுத் துணைத் தலைவர் குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றி வருங்காலத்தில் இறந்துவிடுவாராயின், பதவி விலகிவிடுவாராயின் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவாராயின் அல்லது பிறவாறாகப் பதவி இழந்து விடுவாராயின், குடியரசுத் தலைவர் தமது கடமைகளை மீண்டும் மேற்கொள்ளும் வரையில் அல்லது ஒரு புதிய குடியரசுத் துணைத் தலைவர் மேற்சொன்னவாறு தேர்ந்தெடுக்கப்பெறும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில், இந்தியத் தலைமை நீதிபதி அல்லது அவர் இல்லாதபோது உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்டுள்ள மிக்க முதுநிலையராக உள்ள நீதிபதி ஒருவர் அந்தப் பதவிப் பணிகளை ஆற்றி வருவார்.

(3) குடியரசுத் துணைத்தலைவர்—

(அ) குடியரசுத் தலைவராகச் செயலுறுங்கால், அல்லது

(ஆ) குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளைப் புரியுங்கால், தம் இருத்தலின்மை, நோய் அல்லது பிற காரணம் எதனாலேனும் குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றுவதற்கு இயலாத நிலையில்—

(i) கூறு (அ)-வில் சுட்டப்பட்டுள்ள நேர்வில், மேற்சொன்னவாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு புதிய குடியரசுத்தலைவர் தம் பதவியை ஏற்கும் வரையில் அல்லது குடியரசுத்தலைவராகச் செயலுறும் குடியரசுத் துணைத்தலைவர் தம் கடமைகளை மீண்டும் மேற்கொள்கிற வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில்,

(ii) கூறு (ஆ)-வில் சுட்டப்பட்டுள்ள நேர்வில், குடியரசுத் தலைவர் தம் கடமைகளை மீண்டும் மேற்கொள்கிற வரையில் அல்லது குடியரசுத் துணைத்தலைவர் தம் கடமைகளை மீண்டும் மேற்கொள்கிறவரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரையில்,

இந்தியத் தலைமை நீதிபதி அல்லது அவர் இல்லாதபோது உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்டுள்ள மிக்க முதுநிலையராகவுள்ள நீதிபதி ஒருவர், மேற்சொன்ன பதவிப் பணிகளை ஆற்றி வருவார்.

(4) இந்தப் பிரிவின்படி குடியரசுத் தலைவரின் பதவிப் பணிகளை ஆற்றி வருகிறவர் அந்தப் பதவிப் பணிகளை அவ்வாறு அவர் ஆற்றி வருகின்ற காலத்தின்போதும், அந்தக் கால அளவைப் பொறுத்தும் குடியரசுத் தலைவரின் அனைத்து அதிகாரங்களையும், விலக்குரிமைகளையும் கொண்டிருப்பதுடன், நாடாளுமன்றம் சட்டத்தினால் தீர்மானிக்கும் பதவி யூதியங்கள், படித்தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கும், அதன்பொருட்டு வகைசெய்யப்படும் வரையில், இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவியூதியங்கள், படித் தொகைகள், மதிப்புரிமைகள் ஆகியவற்றிற்கும் உரிமை கொண்டவர் ஆவார்.